**காலி மரபுரிமை மன்றம் 2013**

**------------------------------------------**

காலி மரபுரிமை மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் காலி மரபுரிமை மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

**------------------------------------------------------------------------------------------**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

**-----------------------------------------------------**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி

நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி காலி மரபுரிமை மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் காலி மரபுரிமை மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் புத்தக மீதி ரூபா 404,678 தொகையான வியாபார இருப்பு பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் நிதி நடவடிக்கைகளின் விளைவு ரூபா 2,824,939 பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 545,882 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 3,370,821 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. சொத்துக்கள் கைதவிர்ப்பில் ரூபா 4,069,284 தொகையான நட்டம் ஏற்பட்டமை இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் பின்வரும் இலக்குகளை அடைவதற்கு முடியாதிருந்தது.

(அ) வினைத்திறன் போட்டிக்காக கலந்துகொள்ளல்

(ஆ) “தாரகா மற்றும் எலுஸ்” யுத்த அறை பாதுகாத்தல்.

(இ) காலிக் கோட்டையைப் பார்வையிடுவதற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக மலசலகூடத் தொகுதியை நிர்மாணித்தல்.

## 4.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே கலாச்சார ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் நோக்கில் பரிந்துரைக்கப்பட்ட இந்திய ‘‘கலரி’’ செயற்திட்டத்திற்காக 2012 ஏப்ரல் மாதத்தில் இந்தியா உயர் ஸ்தானிகராலயத்தால் ரூபா 836,985 பெறுமதியான 16 இசைக் கருவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2014 மே மாத இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிராமையின் காரணமாக அவ் இசைக் கருவிகள் காலி மரபுரிமை மன்ற அலுவலகத்தில் விளைவற்றுக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) காலி கோட்டையின் கோட்டைப் பகுதியின் மேற்பகுதி, கோட்டைப் பகுதியின் கீழ் பகுதி மற்றும் நீதிமன்றக் கட்டிடங்களிற்கு அருகாமையில் மின்னொளியூட்டல் முறைமைக்காக ரூபா 3,590,467 தொகை செலவிட்டு 1000 வொட் 400 வொட் அளவிலான 87 மின் விளக்குகளைப் பொருத்தியிருந்ததுடன் இம் மின்சார ஒளியூட்டல் முறைமையை பராமரித்தல் மற்றும் விளக்கேற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு போதிய பதவியணி இன்மையால் சிக்கல் எழுந்திருந்தது.

(இ) காலி மரபுரிமை மன்றத்தின் தகவல் நிலையம் மற்றும் நூலகம் காலிக் கோட்டைக்கு அப்பாலுள்ள பகுதியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு நேர்ந்தமையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு தகவல் பரிமாற்றத்தின் போது தகவல் மீளாய்வின் போது சிக்கல்கள் எழுந்திருந்தன.

(ஈ) காலி மரபுரிமை மன்றத்தின் அலுவலகம் காலி கோட்டைக்கு வெளியே ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையால் காலி மரபுரிமை மன்றத்தை ஸ்தாபித்த நோக்கமான காலிக் கோட்டை மற்றும் அதன் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிலத்தை அபிவிருத்தி செய்தல், பாதுகாத்தல், பேணல், பார்வையிடுவதற்காக வசதியளிப்பதுடன் குடியிருப்பாளர்களின் அன்றாட நலனைப் பேணும் நோக்கை அடைவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

**4.3 தாமதமாகிய செயற்திட்டம்**

சுற்றுலாப் பயணிகளுக்கு காலிக் கோட்டையின் அழகை கடலில் இருந்து இரசிப்பதற்காக தனியார் துறையுடன் ஒருங்கிணைந்து படகுச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு 2011 ஆம் ஆண்டின் போது பழைய இறங்குதுறையை நவீனமயமாக்குவதற்காக ரூபா 250,121 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2014 மே 30 ஆம் திகதி வரையிலும் இப் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

2007 ஆகஸ்ட் முதல் 2012 பெப்ரவரி வரை ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிராமையால் தொழில் திணைக்களத்தின் கட்டளைப்படி தொழில் தருனர், தொழிலாளர் பங்களிப்பாக ரூபா 56,500 தொகையும் மிகை அறவீடாக ரூபா 28,250 தொகையுமாக மொத்தம் ரூபா 84,750 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஊழியர் பங்களிப்புத் தொகையான ரூபா 22,600 தொகையை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

காலி மரபுரிமை மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 19 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 03 செயற்திட்ட உதவியாளர்கள், 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 02 பாதுகாப்புக் காவலாளிகள் பதவிகள் மற்றும் செயற்திட்ட உதவியாளர் (கணக்கு) பதவி என்பன வெற்றிடங்களாக உள்ளன.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) செலவினக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு